காலை 5 மணி முதல் அந்தப் பகுதிகளிலே போதிய அளவிற்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், தேவை என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 351, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

351—

வரி விலக்கு

***37439 முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதிப்புக் கூட்டு வரியிலிருந்து சூரிய சக்தி மின் சாதனங்களுக்கு விலக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் நான்காம் அட்டவணை, பகுதி 'B', வரிசை எண் 26–ன்படி தற்போது சூரிய சக்தியினால் இயங்கும் சூரிய ஒளி சமையற்கலன்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்,*

2015 செப்டம்பர் 25]

'தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012' என்ற ஆவணத்தை 2012 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிட்டு சூரிய சக்திமூலம் மின் உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

முற்பகல் 11–10

அந்த அடிப்படையிலேதான் சூரிய சக்தி மின் உற்பத்திக்கான உற்பத்திச் செலவை ஓரளவு குறைத்திடும் வகையில் solar unit as a composite unit and accessories மீது விதிக்கப்படும் மதிப்புக் கூட்டு வரியை முற்றிலுமாக விலக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டு, அது விலக்கிக்கொள்ளப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்றுமதி நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் மதிப்புக் கூட்டுத் தொகையை திரும்ப வழங்குவதில் ஒரு வருடத்திற்கு மேல் காலதாமதம் ஏற்படுகிறது. நிறுவனங்கள் refund-க்கு விண்ணப்பித்த 3 அல்லது 4 மாதங்களுக்குள் அதைத் திருப்பி அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திருப்புத் தொகை கொடுப்பது சம்பந்தமாகக் கோரிக்கை வைத்துள்ளார்கள். வணிகர்கள், அது சார்ந்த நமுனாக்களைத் தாக்கல் செய்தால் உடனடியாக வழங்கப்படும். இதுவரை 9,798 வணிகர்களுக்கு திருப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]